IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

DEPOSITION OF WITNESS
SC.NO.167/2021

Deposition of Witness for P.W.2

| | | |
|---|---|---|
| NAME | - | முரேஷ் |
| FATHER'S NAME | - | ஈஸ்வரன் |
| VILLAGE | - | |
| TALUK | - | |
| CASTE | - | |
| OCCUPATION | - | |
| RELIGION | - | |
| AGE | - | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 15.04.2024.

Accsued A1,A2,A4 Present.A3 absnet No representation for A3.

நான் தீர்த்தம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் ஏ.ஜி.எஸ் தனியார் பள்ளியில் பஸ் டிரைவராக வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் என்னுடைய நிலத்திற்கு பக்கத்து நிலத்துக்காரர்கள். எதிரிகளுக்கும் என் குடும்பத்திற்கும் நிலத்தில் மாடு மேய்ப்பது சம்மந்தமாக முன் விரோதம் உள்ளது. 26.04.2021 தேதியில் அன்று மாலை சுமார் 5.30 மணிக்கு வெங்டேசனனின் அப்பா சுப்பிரமணி மாடு எங்கள் நிலத்தில் மேய்ந்து விட்டது. என் அப்பா சுப்பிரமணியிடம் இது போன்று மாடுயை விட்டு மேய்த்து பயிரை நாசம் செய்கீறிர்களே என்று கேட்டதற்கு என் பிள்ளையை போய் கூட்டி வருகிறேன் என்று கூறி சென்று விட்டார். என் அப்பாவும் என் அண்ணன் என்

மனைவி ஆகிய மூவரும் எங்கள் மாட்டு கொட்டா**யில்** வேலை செய்து கொண்டு இருந்த போது வெங்கடேசன் அவரின் மகன் வல்லரசு பாபு அவருடைய மகன் தரணி, வசந்த் ஆகியோர் கூட்டமாக வருவதை பார்த்து என் மனைவி ரம்யா எனக்கு போன் செய்து என் அப்பாவை அடிக்க வருவதாகவும் உடனே என்னை வரும்படியும் சொன்னார். அப்போது நான் வீட்டில் இருந்தேன். எங்கள் வீடும் நிலமும் பக்கத்து பக்கத்தில் உள்ளது. நான் உடனே ஒடி வந்த போது வெங்கசடேசன் பெரிய மரத்தடியால் என் அப்பாவின் மார்பின் மீது அடித்தார். என் அப்பா கீழே விழுந்து விட்டார். பக்கத்தில் இருந்த பாபு வெங்கசடேசடன் இடம் இருந்த தடியை பிடுங்கி என் அப்பாவின் வயிற்றின் மீது அடித்தார். உடன் இருந்த வல்லரசு என் அப்பாவின் மார்பின் மீது எட்டி உதைத்தார். தரணி என் அப்பாவின் வயிற்றின் மீது கையால் குத்தினார். வசந்த் என் அப்பாவின் நெஞ்சு மீது காலால் எட்டி உதைத்தார். அப்போது நானும் என் அண்ணனும் ஒடுகத்தூரை சேர்ந்த திருப்பதி அவரின் மனைவி சாந்தி ஆகியோர் தடுக்கும் போது என் அண்ணனின் இடது முழுங்கை மீது பாபுவிடம் இருந்து தடியை பிடுங்கி வெங்கடேசன் அடித்தார். என் அண்ணன் கீழே விழந்து விட்டார். உடன் இருந்த பாபு என் அண்ணனின் மார்பின் மீது குத்தினார். வசந்த், வல்லரசு, தரணி ஆகியோர் என் அண்ணனின் இடுப்பு மற்றும் வயிற்றில் எட்டி உதைத்தார்கள். வெங்கடேசன் கீழே இருந்த தென்னை மட்டையை எடுத்து என் அப்பாவின் இடது மார்பின் மீது மாறி மாறி அடித்தார். அவர்கள் கையில் இருந்த தென்னை மட்டை கீழே போட்டு விட்டு தடியை கையில் வைத்து கொண்டு இனி என் பேச்சுக்கு வந்தால் உன்னையும் கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டினார். அதன் பிறகு தடியை அங்கேயே போட்டு விட்டு தென்னை மட்டையை எடுத்து கொண்டு போய்விட்டார்கள். நான் ஒடி போய் என் அப்பாவை பார்க்கும் போது என் அப்பா இறந்திருந்தார். நான்

ஆம்புலன்ஸிற்கு போன் செய்தேன். வேப்பங்குப்பம் போலீசுக்கு போன் மூலம் தகவல் சொன்னேன். போலீசார் சுமார் 1 அல்லது 1.30 மணி நேரம் கழித்து சம்பவ இடத்திற்கு வந்தார்கள். போலீசார் வருவதற்கு முன்னரே ஆம்புலன்சு வந்து என் அப்பாவை பரிசோதனை செய்து அவர் இறந்து விட்டதாக சொல்லிவிட்டு சென்று விட்டார்கள். போலீசார் வந்த பிறகு என் அப்பாவை வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். என் அண்ணனை குடியாத்தம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று புறநோயாளி பிரிவில் சிகிச்சை பெற்று என் அப்பா இறந்து விட்டதால் என் அண்ணனை நான் வேப்பங்குப்பம் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று புகார் அளித்தேன். 27.04.2021 தேதியில் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் என் அப்பாவின் பிரேதத்தை காவல் ஆய்வாளரிடம் என் அண்ணன் அடையாளம் காட்டினார். போலீசார் வழக்கு சம்மந்தமாக என்னிடம் விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்ராகாததால் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.</u>

P REVATHY Digitally signed by P REVATHY